# உன்னதத்திலிருந்து உனக்கொரு சம்மன்!

<u>கர்த்தர் உங்களை பெறுக்கமாக ஆசீர்வதிப்பாராக !</u>

ஜான் வெஸ்லி என்ற ஒரு பெரிய சீர்த்திருத்தவாதி என்பவர் இங்கிலாந்து நாட்டையே கலங்கடித்தவர்.



அவர் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு சென்று வல்லமையாக பிரசங்கம் செய்தார். அவர், காரியங்களை விளக்கி சொல்வதிலே மிகவும் திறமை யானவர். தேவ ஆவியினுடைய பிரசங்கத்தின் வரம் பெற்றவர். அவர் வாலிப பிராயத்திலே தனது கல்லூரி படிப்பை முடிக்கிற நேரத்திலே, திடிரென்று ஒரு குரல் சத்தம் கேட்டதாம். “ஜான் வெஸ்லியே! நீ படிப்பை முடிக்க போகிறாய். படிப்பை முடித்துவிட்டு நீ என்ன ஆக போகிறாய்?”. அதற்கு ஜான் வெஸ்லீ சொன்னார் “நான் வக்கிலுக்கு படித்து ஒரு பெரிய வக்கீலாக ஆக போகிறேன்” என்றார். அதற்கு அந்த சத்தம் “நீ வக்கீலாக ஆனபிற்பாடு என்ன செய்ய போகிறாய்?” என்று கேட்டது. அதற்கு அவர் “நான் ஏராளமான கேஸ்க்களை எடுத்து கொண்டு அதன் மூலம் பெரிய புகழ் பணம் பெறுவேன்” என்றார். அதற்கு அந்த சத்தம் “சரி அதற்கப்புறம் நீ என்ன செய்ய போகிறாய்?” என்று கேட்டது. அதற்கு அவர் திருமணம்



செய்து கொண்டு, குடும்பத்தை ஸ்தாபிபேன் என்றார். அதற்கு அந்த சத்தம் “ பிறகு நீ என்ன செய்யபோகிறாய்?” என்றது. அதற்கு அவர் “அப்புறம் நான் வீடுகளை கட்டி, முதிர்வயதான காலத்திலே ஓய்வெடுத்து சந்தோஷமாக காலத்தை ஓட்டுவேன்” என்றார். அதற்கு அந்த சத்தம் “அப்புறம் நீ என்ன செய்ய போகிறாய்?” என்றது. அதற்கு அவர் “நான் இறந்து போய் நல்லடக்கம் பண்ணப்பட்டு இருப்பேன்” என்றார். அதற்கு அந்த சத்தம் “வெஸ்லீ அப்புறம் நீ என்ன செய்ய போகிறாய்?” என்றது.

கர்த்தருக்குள் பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! இந்த வாழ்வு நம்முடைய மரணத்தோடு முடிந்துவிடுகிறதில்லை என்று நமக்கு தெரியும்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு திருமறை விசேஷமாக சொல்லுகிற காரியம்

"அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறபடியே, "

எபிரேயர் 9.27

மனுஷர் ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயதீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தில் நாம் எவ்வளவு காலம் வாழபோகிறோம்? நம்முடைய ஆயுள் முடிந்து நாம் மரணத்தை சந்திக் கும்போது, நியாயத்தீர்ப்பிலே நிற்கவேண்டும் என்று ஆண்டவர் நமக்கு திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார். இந்த நீயாயத்தீர்ப்பைப்பற்றி மக்கள் சிந்திக்கக்கூடாது, அறிந்து கொள்ளகூடாது என்று சாத்தான் பலவிதமான தப்பான கொள்கைகளை கொண்டு வந்திருக்கிறான். அநேக மார்க்கங்கள் தேவன் சொன்னதற்கு விரோதமாக போதிக் கின்றன. ஒரு மனிதன் மரித்து இரண்டு நாட்களுக்குள்ளே இன்னொரு ஜென்மம் எடுத்து கொள்கிறான் என்கிறது இந்து மார்க்கமும் புத்த மார்க்கமும். இதை கோடிக்கணக்கான பேர் நம்புகிறார்கள். அப்படி யானால் நியாயத்தீர்ப்பு இல்லை, அதனால் இன்னொரு பிறவி எடுக்கி றோம் என்று சொல்லுகிறார்கள். ஒரு தடவை மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் தான் உண்மையான கிறிஸ்தவ கொள்கையாக இருக்கிறது. நம்முடைய வாழ்நாள் ஒவ்வொன்றும் நியாயத்தீர்ப்பை நோக்கி இருக்கிறது. லுத்தர் சாஸ்திரியார் போன்ற பெரியோர்கள் இந்த நியாயத்தீர்ப்பை நினைக்கும்போது நாங்கள் நடுங்குகிறோம், பயப் படுகிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் இன்று அந்த நியாயத் தீர்ப்பை குறித்து நாம் பயப்படுகிறோமா? நாம் மரித்தாலும் சரி, உயிரோடே இருந்தாலும் சரி, ஒரு நாள் தேவனுக்கு முன்பாக

**அந்த நியாயத்தீர்ப்பிலே நிற்கவேண்டும். இன்று இந்த வாழ்விலே நாம் செய்த காரியங்களுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது.**

"மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்



கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்."

**அப்போஸ்தலர் 17.31**

**ஆண்டவர் ஒரு நாளை நியமித்து வைத்திருக்கிறார். அந்த நாளிலே நீங்கள் நியாயந்தீர்க்கப்படுவீர்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். உலக தெய்வ மாகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக நியாயத்தீர்ப்பும் ஒவ்வொரு மனிதனின் மேலும் வரும் என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும்.**

"ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்."

**ரோமர் 14.12**

**இந்த நியாயத்தீர்ப்பை கொடுக்கும் தேவன் யார்?**

"ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்."

**2 கொரி 5.10**

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக இந்த உலகத்தின் மக்கள் ஒவ்வொருவரும் நிற்கவேண்டும். நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ, அவரை அறிக்கையிடுகிறோமோ இல்லையோ, இந்த உலகத் தில் பிறந்த ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டும் என்று திருமறை சொல்லுகிறது.**

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வரும்போது என்னத்தை கொண்டுவருகிறார்?**

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது."

**வெளி 22.12**

**அவர் வரும்போது நம்முடைய கிரியைகளுக்குத்தக்கதான பலனை கொண்டு வருவார். ஆண்டவருடைய வருகைக்கு யாரும் நாள் குறிக்கமுடியாது. அந்த நாளை பிதா தவிர வேறு ஒருவனும் அறியான் என்று வேதம் சொல்லுகிறது. இந்த நியாயத்தீர்ப்பு எப்பொழுது துவங்குகிறது?**

"நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மலையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போல துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினிஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது."

**தானியேல் 7.9,10**

**பரலோகத்திலே நடக்கிற இந்த நியாயசங்கம் காட்சியை தானியேல் தீர்க்கதரிசி விசேஷமாக விவரிக்கிறார். பாப்பு அரசர்கள் 1260 ஆண்டுகள் வரைக்கும் ஆட்சி செலுத்தும் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.**

**போப்பு கிரிகோரி என்பவர் முதலாவதாக கி.பி 538-வது ஆண்டிலே பாப்பு அரசராக ஆக்கப்பட்டார். அதுமுதல் கொண்டு இந்த 1260 வருஷங்களை**



**கணக்கு போட்டு பார்த்தால் அது 1798-வது வருஷத்திலே முடிகிறது. 1798-வது வருஷத்திற்கு பின்பு பிரெஞ்சு புரட்சி உண்டாகி பெல்தியேர் என்ற ஒரு ஜெனரல் வந்து பாப்பு அரசரை சிறைப்படுத்திகொண்டு பிரான்ஸிலே சிறையிலடைத்தார். பாப்பு அரசு ஒழிந்தது என்ற ஒரு நிலமை வந்தது. ஆகவே இந்த 1260 வருஷத்திற்கு பிற்பாடு இந்த நியாயத்தீர்ப்பு எப்போது துவங்குகிறது என்று வேதம் நமக்கு தெளிவாக சொல்லுகிறது**

"அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்."

**இந்த இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் 1844-ஆம் ஆண்டில் முடிகிறது. அந்த ஆண்டிற்கு முன்பு அந்த நியாயத்தீர்ப்பு நடக்க வில்லை என்று வேதம் கூறுகிறது.**

"அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும்குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான் "

**அப்போஸ்தலர் 24.25**

"நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமா யிருக்கும்?"

**1 பேதுரு 4.17**

**அப்படியானால் நியாயத்தீர்ப்பு பின்னான காலத்திற்கு ஒத்திபோடுகிறது என்று வேதம் சொல்லுகிறது.**

**அந்த 1844-ஆம் ஆண்டிலே இன்னொரு காரியம் நடந்தது. பெரிய பிரசங்கிமார்கள் எழும்பி இந்த வேதத்திலிருக்கிற மூன்று தேவதூதர் களின் தூதுகளை உலகத்தில் பிரசங்கிக்க ஆரம்பித்தார்கள்.**

"பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத் தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்."

**வெளி 14.6,7**

**ஆகவே தீர்க்கதரிசனங்கள் என்றைக்கும் தப்பிப்போவதில்லை. அந்த தீர்க்கதரிசனங்களின் காலக்கட்டங்கள் சரியாக நிறைவேறிகொண்டி ருக்கிறது என்பதை நாம் நன்றாக புரிந்து கொள்ளவேண்டும்.**

**அந்த நியாயத்தீர்ப்பு முடிந்து இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே வரும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப் பார்கள் என்று வேதம் கூறுகிறது. கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் மரித்து அடக்கம் பண்ணப்பட்டிருக்கும்போது, அதில் யார் உயிர்தெழு தலுக்கு பங்குள்ளவன் என்பது தீர்மானிப்பட்டுவிடும்.**

**1)** "நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட



ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மலையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போல துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினிஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது."

**தானி 7.9**

**ஆகவே நியாயத்தீர்ப்புக்கு சிங்காசனங்கள் ஆயத்தமாக்கப்பட்டிருந்தன. இந்த சிங்காசனங்கள் எங்கு ஆயத்தமாக்கப்பட்டிருந்தது?**

"**கர்த்தர்** வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது."

**சங் 103.19**

**அவருடைய சிங்காசனம் இருக்குமிடம் பரலோகம் என்று வேதம் கூறுகிறது. பரலோகத்திலே நியாயத்தீர்ப்பு நடக்கிறது என்று வேதம் கூறுகிறது.**

**2) "நீண்ட ஆயுசுள்ளவர் உட்கார்ந்திருந்தார்." என்று சொல்லப்பட்டவர் பிதாவாகிய தேவன் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.**

"இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்."

**தானி 7.13**

**பிதாவாகிய தேவன் அங்கு தலமை ஸ்தானத்தில் உட்காருகிறார்.**

3) "அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது."

**தானி 7.10**

**இங்கு இரண்டு விதமான காரியத்தை குறித்து பார்க்கிறோம்.**

**- ஆயிரமாயிரம் பேர் அவரை சேவித்தார்கள்.**

**- கோடானகோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்.**

**கோடானகோடி பேர் என்றால் அது தேவதூதர்களை குறிக்கிறது. அங்கு கோடானகோடி தேவ தூதர்கள் பரலோகத்திலே இருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது.**

**ஆயிரமாயிரம் பேர்கள் என்றால் மற்ற உலகத்தின் பிரதிநிதிகள் என்று வேதம் சொல்லுகிறது.**

**இந்த உலகம் அண்டசராசரத்தின் காட்சி சாலையாக மாறினது. ஆகவே பாவத்தினுடைய முடிவு என்ன என்பதை அந்த நியாயத்தீர்ப்பிலே வைத்து அண்டசராசரங்கள் மத்தியிலேதான் நியாயத்தீர்ப்பு கொடுக்கபடவேண்டும். இந்த நியாயத்தீர்ப்பு நமக்கு மட்டுமல்ல. பாவம் என்பது என்ன, அதனுடைய தன்மை என்ன என்பதை அண்டசராசரத்தின் எல்லா மக்களும் அறிந்து கொண்டு, இனிமேல் எக்காலத்திலும் பாவம் எந்த வகையிலும் எந்த உலகத்திலும் உருவாககூடாது என்ற தீர்மானத்தின்படி இந்த நியாயசங்கம் எல்லா உலகத்தாருக்கு முன்பாக வைக்கப்படுகிறது.**

4) "அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது." **தானி 7.10**



**யாருடைய புத்தகங்கள் திறக்கப்பட்டது? திருமறை சில புத்தகங்களை குறித்து பேசுகிறது. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு புத்தகத்தை ஆண்டவர் வைத்திருக்கிறார். அந்த புத்தகத்தில் நாம் என்ன நினைக்கிறோம், என்ன பேசுகிறோம், எப்படி வாழ்ந்தோம் என்று எழுதப்பட்டிருக்கிறது. நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற காவல் தேவதூதர்கள் அந்த புத்தகத்தில் நம்முடைய காரியங்களை எழுதி வைக்கிறார்கள். இந்த பரிசுத்த தேவதூதர்கள் பொய் சொல்வது இல்லை. தப்பிதமாக எழுதுவதுமில்லை. ஆகவே நிச்சயமாக நடந்த காரியத்தை அவர்கள் குறித்து வைக்கிறார்கள்.**

"இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

**மத் 18.10**

**தேவதூதர்கள் பரலோகத்திற்கு போவதும் வருவதும் நம்முடைய புத்தகங்களில் குறித்து வைப்பதுமாக இருக்கிறார்கள் என்று வேதம் கூறுகிறது.**

5) "அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்.

அதற்கு நான்கு ஜீவன்களும் ஆமென் என்று சொல்லின. இருபத்து நான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டார்கள்."

**வெளி 5.13,14**

**இந்த இருபத்து நான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் இந்த உலகத்திலிருந்து எடுத்து கொள்ளப்பட்டவர்கள். இந்த உலகத்தின் மக்களுடைய காரியங்கள் யாவும் அவர்களுக்கு தெரியும். அவர்கள் நமக்காக பேசுகிறார்கள். ஆகவே நியாயத்தீர்ப்பின் மூல ஆதாரங்கள் என்ன ?**

"**கர்த்தரின்** கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது."

**நீதி 15.3**

**கர்த்தருடைய கண்களுக்கு மறைவாக ஒன்றுமே கிடையாது. நாம் எதை செய்தாலும் அவர் பார்த்துகொண்டேயிருக்கிறார்.**

"மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் அவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்."

**வெளி 20.12**

**நம்முடைய புத்தகங்கள் எடுக்கப்பட்டு, அந்த புத்தகங்களிலே எழுதி இருக்கிற காரியங்களை வைத்து அந்த நியாத்தீர்ப்பு நடக்கிறது.**



"அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்கிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலை யாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப் பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது."

**பிலிப்பியர் 4.3**

**தேவனுடைய ஊழியத்தை சிரமப்பட்டு கஷ்டப்பட்டு செய்கிற பிள்ளைகளின் பெயர்கள் அந்த ஜீவ புத்தகத்தில் இருக்கிறது என்று வேதம் கூறுகிறது.**

**ஜீவ புத்தகத்திலே யாருடைய பெயர் எழுதப்பட்டிருக்கும்?**

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்."

**வெளி 3.5**

**பிசாசின் மேலும், மாம்சத்தின் மேலும், பாவத்தின் மேலும் ஜெயங்கொள்கிறவன் எவனோ அவன் பெயர் அந்த ஜீவ புத்தகத்தில் எழுதியிருக்கும். சத்தியத்தை கைக்கொள்ளுகிற பிள்ளைகளுக்கு ஏராளமான போராட்டங்கள் இருக்கும். பற்பலவிதமான சோதனைகள்**

**இன்னல்கள், இடையூறுகளை சாத்தான் நமக்கு கொண்டு வருவான். இரட்சிக்கப்பட விரும்பினால் தேவனுடைய சத்தத்தை நாம் கேட்க வேண்டும். நியாயத்தீர்ப்பு இருக்கிறது என்று நாம் ஒவ்வொருவரும் ஞாபகத் தில் வைத்து கொள்ளவேண்டும். நம் உள்ளத்திலே இந்த பாவத்தை செய்வது தப்பில்லை என்று சொன்னாலும் அதை எதிர்த்து போராட வேண்டும். அதுவே தேவனை மகிமைப்படுத்துகிறது. தாய், தந்தை, சகோதர சகோதரிகள் யார் வந்து நம்மை ஆண்டவரிடத்திலிருந்து பிரித்தாலும் நாம் சரியான பாதையில் போய் கொண்டிருக்கவேண்டும். அவர்கள் வந்து நமக்காக அந்த நியாயத்தீர்ப்பிலே வாதாட முடியாது. அவர்களும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். தேவனை குறித்து நாம் மற்றவர் களிடம் சொல்லவேண்டும் வெட்கப்படகூடாது. எப்படி நாம் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அதைபோல நாமும் விரும்பவேண்டும்.**

"என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரன் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்."

**லூக்கா 9.26**

"அன்றியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கைபண்ணுவார். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் தேவதூதர் முன்பாக மறுதலிக்கப்படுவான்."

**லூக்கா 12.8,9**

**இயேசுவை பற்றி, அவரே மெய்யான தேவன் என்று நாம் பலருக்கு முன்பாக அறிக்கை செய்யவேண்டும். சத்தியத்தை எடுத்து சொல்லவேண்டும். அப்படி செய்யும்போது அவரும் இவன் நீதிமான் என்று அறிக்கைசெய்வார்.**



"ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்."

**வெளி 22.19**

**நம்முடைய பெயர் ஜீவ புத்தகத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால் நான் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். நாம் சோதனைகளுக்கு இடம் கொடுப்போமானால் நம்முடைய பெயரை ஆண்டவர் அந்த புத்தகத்திலிருந்து கிறுக்கிபோடுவார்.**

"அப்பொழுது **கர்த்தருக்குப்** பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; **கர்த்தர்** கவனித்துக்கேட்பார்; **கர்த்தருக்குப்** பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப் பட்டிருக்கிறது."

**மல்கியா 3.16**

**தேவனுக்கென்று நாம் செய்கின்ற எல்லாவிதமான வேலைகளும் அங்கு எழுதப்பட்டிருக்கும். நாம் கொடுக்கிற காணிக்கைகள், தசம பாகங்கள், ஊழியத்திற்கென்று செய்கிற காரியங்களை ஆண்டவர் அந்த புத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார். மற்றவர்கள் இரட்சிக்கப்பட கூடாது என்று தடைப்பண்ணுகிறவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனென்றால் அந்த பாவம் மகா பெரிய பாவம் என்று தேவன் சொல்லுகிறார்.**

"தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலி ருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக."

**பிரசங்கி 5.2**

**நம் பேச்சிலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எதை வேண்டு மனாலும் பேசிவிடகூடாது. நாம் பேசும் எவ்வார்த்தைகளையும் தேவன் குறித்துவைக்கிறார்.**

**ஒரு ஆட்டு மந்தைக்கு போய் ஆட்டை திருடவேண்டும் என்று ஒரு தகப்பன் தன் மகனோடு புறப்பட்டான். அந்த சிறு பையனை ஒரு இடத்திலே நிறுத்தி வைத்துவிட்டு “யாராவது வந்தால் என்னை கூப்பிடு ” என்று சொல்லி ஒரு கொழுத்தை ஆட்டை தூக்கி தோளின்மேலே போட்டு கொண்டு தப்பித்து போய்விடவேண்டும் என்று சொல்லி சுவற்றின்மேலே ஏறி கொண்டு “தம்பி! யாராவது பார்க்கிறார்களா” என்று கேட்டான். அதற்கு அந்த மகன் “ஆமாம் அப்பா! ” என்றான். உடனே அந்த தகப்பனுக்கு பயம் வந்து அந்த ஆட்டை கீழே போட்டு விட்டு வேகமாக ஓடி ஒரு மரத்தின் கீழே ஒளிந்து கொண்டு “யார் நம்மை பார்த்தார்கள்?” என்று அந்த தகப்பன் தன் மகனிடம் கேட்டதற்கு அந்த மகன் “ஆமாம் அப்பா ! நீ திருடும்போது கடவுள் உன்னை பார்த்தார்” என்றான்.**

**பகலிலும், இரவிலும் நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தர்**



**பார்த்துகொண்டேயிருக்கிறார். தேவதூதர்கள் நாம் செய்யும் காரியங்களை குறித்து வைத்திருக் கிறார்கள்.**

"சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்; சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும். அப்படியே சிலருடைய நற்கிரியைகளும் வெளியரங்கமாயிருக்கும்; அப்படி இராதவைகளும் மறைந்திருக் கமாட்டாது."

**1 தீமோ 5.24,25**

**மனந்திருந்தினவர்களுடைய பாவங்கள் கர்த்தர் கிறுக்கிபோடுகிறார். மனந்திருந்தாதவர்களின் பாவங்கள் நியாயத்தீர்ப்பிலே வந்து நிற்கும் என்று வேதம் சொல்லுகிறது.**

**ஆகவே நியாயத்தீர்ப்பின் வேலை வந்தது, நாம் நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப்படுத்தவேண்டும். இந்த தூதுகளை கவனமாய் கேட்டு நாம் மனந்திரும்பி பரலோகத்திற்கு செல்ல ஆயத்தப்படுத்தவேண்டும். பாவம் செய்து கொண்டேயிருந்தால் லாபம் என்ன? நித்திய மரணமா? நித்திய ஜீவனா?**

"பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின;அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் அவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்."

**வெளி 20.11,12**

**நியாயத்தீர்ப்பிலே ஆண்டவர் நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தபோது என்ன கிரியை செய்தோம் என்று பார்க்கிறார். நமக்கு கொடுக்கப்பட்ட சந்தர் பங்களை எப்படி நாம் கணக்கு கொடுப்போம்?**

"மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயதீர்ப்புநாளிலே கணக் கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்."

**மத் 12.36,37**

**நாம் என்ன பேசினோம்? என்ன வேண்டாத பேச்சுக்களை பேசினோம்? யாரை திட்டினோம்? என்று அன்று கணக்கு கொடுக்கவேண்டும். நியாயத்தீர்ப்பு எப்படியிருக்கிறது என்று பாருங்கள். எதிலும் பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். நாம் எப்படிப்பட்ட வார்த்தைகளை பேசினாலும் அவரிடம் மன்னிப்பு கேட்டால் அவர் நம்மை நிச்சயமாய் மன்னித்து ஏற்றுக்கொள்வார்.**

"ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்."

"அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்."

**2 கொரி 5.10 , 2 கொரி 10.5**



**பேச்சிலே மட்டும் ஆண்டவர் நியாயந்தீர்க்கமாட்டார். உள்ளத்திலே நினைக் கிறதையிலும் அவர் நியாயந்தீர்ப்பார். உள்ளத்திலே பரிசுத்த எண்ணங் களை கொண்டவர்களாக இருக்கவேண்டும்.**

"மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; **கர்த்தரோ** ஆவிகளை நிறுத்துப்பார்க்கிறார்."

**நீதி 16.2**

**நாம் செய்கின்ற எல்லா காரியத்தின் நோக்கத்தையும் ஆண்டவர் நிறுத்து பார்க்கிறார். ஏழைகளுக்கு துணி, சாப்பாடு, பணம் கொடுக்கிறோம். அதன் நோக்கம் என்ன? நம் தானத்திற்கு பெயர் வரவேண்டும் என்று நாம் அவைகளை செய்கிறோமா? ஆகவே இதிலும் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.**

"ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்."
**பிரசங்கி 12.14**

**எல்லா காரியத்தையும் கர்த்தர் நியாயத்திலே கொண்டு வருவார்.**

"சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்."
**யாக்கோபு 2.12**

**அந்த சுயாதீனப்பிரமாணம் என்றால் என்ன?**

"ஏனென்றால், விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால், நீ விபசாரஞ்செய்யாமலிருந்தும் கொலைசெய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்."
**யாக்கோபு 2.11**

**அந்த சுயாதீனப்பிரமாணம் என்றால் அந்த பத்து பிரமாணத்தை கடைப்பிடித்தல். ஆண்டவருடைய பத்து கற்பனைகளுக்கு நாம் பரிசுத்தமாய் கீழ்ப்படிய வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. அப்பொழுது நாம் நியாயத்தீர்ப்பிலே கறையற்றவர்களாக இருப்போம். பரிசுத்தம்! பரிசுத்தம்! பரிசுத்தம்! நமக்கு தேவை. பரலோகத்திலே அப்படிப்பட்டவர்கள் தான் நித்திய ஜீவனாய் இருக்கமுடியும். நாம் பரிசுத்தமாய் ஜீவிக்க ஆண்டவர் நமக்கு பெலனை கொடுக்க அவரிடம் மன்றாடி வேண்டிக்கொள்வோம். - ஆமென்**